# தமிழின் சிறப்புப் பெயர்கள்




கனியின் சுளையையை விட இனிமையானது
கரும்புச் சாற்றின் சுவையை விட இனிமையானது
தேனின் சுவையை விட இனிமையானது
காய்ச்சிய பாகின் சுவையை விட இனிமையானது
தமிழின் இனிமை
பாலின் சுவையை விட இனிமையானது
இளநீரைவிட இனிமையானது
உயிரை விட உயர்வானது நம் தமிழ் மொழி
பாடலின் ஆசிரியர் பாரதிதாசன் ஆவார்

# ஆசிரியர் குறிப்பு

- இயற்பெயர்   : கனக சுப்புரத்தினம்
- சிறப்புப்பெயர் : புரட்சிக்கவி, பாவேந்தர்
- எழுதிய நூல்கள்:
- அழகின் சிரிப்பு
- குடும்ப விளக்கு
- இருண்ட வீடு

# தமிழின் இனிமை - பாடல்

*கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்*
*கழையிடை ஏறிய சாறும்,*
*பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்*
*பாகிடை ஏறிய சுவையும்,*
*நனிபசு பொழியும் பாலும் - தென்னை*
*நல்கிய குளிரிள நீரும்,*
*இனியன என்பேன் எனினும் - தமிழை*
*என்னுயிர் என்பேன் கண்டீர்!*



# பாடலின் பொருள்

இயற்கையில் பல்வேறு வகையான சுவைகள் இருக்கின்றன. நன்கு பழுத்த பழத்தின் சுளையில் இனிமை இருக்கிறது. கரும்புச் சாற்றிலும் இனிமை உண்டு. தேனிலும் இனிமை உண்டு. காய்ச்சிய வெல்லப் பாகிலும் இனிமை இருக்கிறது. பசுவின் பாலிலும் இனிமை இருக்கிறது. தென்னையின் இளநீரிலும் இனிமை இருக்கிறது. ஆனால் ,தமிழ் இத்தகைய சுவைகளையும் விட உயர்ந்தது. தமிழோ என் உயிர் போன்றது. (**கழை** = கரும்பு)

# சொல் பொருள்

- கனி  - பழம்
- நனி -  மிகுதி
- கழை – கரும்பு
- நல்கிய - வழங்கிய